Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்களின் நாளேடு | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | புரட்டாதி 27 | [13-10-1993] | புதன்கிழமை | ஓசை 237

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## பல்கலை மானிய ஆணைக்குழு ஜனாதிபதியால் மறுசீரமைப்பு

பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு ஜனாதிபதி விஜேதுங்கவினால் மறுசீரமைக் கப்பட்டுள்ளது. இன்று முதல் இம் மாற்றம் நடைமுறைக்கு வருகிறது. பல்கலைக்கழக மானிய ஆணைக்கு தலைவராக பேராசிரியர் டி. எல். பண்டிதரட்ன நியமிக்கப்பட்டுள்ளார் உப தலைவராக பேராசிரியர் ஐ. பாலசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். கே. துரைராஜா, டி. பி. ஐ. பி. எப். சிறிவர்த்தன, ஜனாப் நகூப் உட்பட ஏழுபேர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் முன்னைய உறுப்பினர்கள் தமது இராஜினாமா கடிதத்தை நேற்று ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தனர்.

# 5 மேலதிக படையணிகள் உருவாக்க இராணுவத் தளபதி நிதி கோருகின்றார்

## அடுத்த ஒக்டோபருக்குள் பிரச்சினை தீருமாம்

(அனுராதபுரம்)

**மேலதிகமாக ஐந்து படையணிகளை உருவாக்குவதற்கு அரசாங்கத்திடம் நிதி உதவி கோரியுள்ளோம் என சிறிலங்காவின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னா தெரிவித்தார். அனுராதபுரத்தில் கடந்த ஐந்தாம் திகதி இராணுவத்தின் நாற்பத்தி நான்காவது ஆண்டு நிறைவை ஒட்டி அனுராதபுரம் ஜெயசிறி மகாபோதியில் இடம்பெற்ற வைபவத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்**

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்; அடுத்த ஆண்டு ஒக்டோபரில் வரும் இராணுவதினத்திற்கு முன்பாக வடக்கு-கிழக்கில் 'பயங்கரவாதத்திற்கு' முடிவுகட்டி சமாதானத்தை நிலைநாட்டுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை முற்றுகையினால் புலிகளின் ஆதிக்கத்தை சுக்குநூறாக்கிவிட்டோம். இந் நடவடிக்கை எமக்கு பல பாடங்களைப் புகட்டியுள்ளது; நாம் புலிகளை எதிர்கொண்டு பலத்த எதிர்ப்பின் மத்தியில் முன்னேறினோம், ஆயுதபலத்தை பிரயோகித்து புலிகளைப் பின்னடையச் செய்யலாம் என்பது தெரிகிறது. பெரும் பிரதேசத்தை நாம் கைப்பற்றினோம். முறையாக திட்டமிட்டால் வெற்றியீட்ட முடியும் என்பதை இந் நடவடிக்கை நிரூபித்துள்ளது.

எங்கள் இராணுவம் மிகப் பெரியதாகும். எல்லோரையும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் கூட்டி உரை வழங்க என்னால் முடியாது. எங்கள் இராணுவம் இன்று 44 ஆண்டுகளைப் பூர்த்தியாக்கும் இவ் வேளையில் ஒரு திடமான உறுதிப்பாட்டை எடுக்கவேண்டும். எங்கள் படைவீரர்கள் பலமானவர்கள்: அவர்களுக்கு ஒரு நோக்கு உண்டு. அவர்களுக்கு ஏதும் சந்தேகங்கள் இருப்பின் அதை தணிப்பதற்காகவே இந்த வைபவத்தை நடாத்துகிறோம். இதை ஒவ்வொரு வருடமும் நடத்த வேண்டுமென எதிர்கால தளபதிகளை வேண்டுகிறேன் என்றார்.

## முன்னோடிப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ். கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (சா[தர] முன்னோடித் தேர்வுப் பரீட்சை நாளை 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பரீட்சையின் பிரதம தேர்வாளர்களுக்கான கூட்டமொன்று நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

புள்ளிமதிப்பீட்டாளர்கள் உரிய காலத்தில் புள்ளி மதிப்

(3ஆம் பக்கம் பார்க்க)

## சங்கீதம் பரதநாட்டியம் பட்டதாரி கற்கைநெறி

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக் கழகம் நீண்ட கால முயற்சிக்குபின் முதல்முறையாக சங்கீதம், பரதநாட்டியம் ஆகிய துறைகளுக்கான பட்டதாரி கற்கை நெறி ஒன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளது.

மேற்படி 92,93ஆம் ஆண்டு புதிய கற்கை நெறிக்கு 34 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் வாய்ப்பாட்டுக்கு 14 பேரும், வீணை, பண்ணிசைக்கு ஒவ்வொருவரும், பரதநாட்டியத்துக்கு 18 பேரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான விரிவுரைகள் நேற்று முன்தினம் தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

இதேவேளை 1992/93ஆம் ஆண்டுக்கான டிப்புளோமா கற்கைநெறிக்கான புதிய மாணவர்களுக்கும் நேற்று முன்தினம் விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன. இக்கற்கை நெறிக்கு மொத்தம் 57 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

[சி]

## கல்வி நிர்வாக அலுவலர் சங்கம் யாழ். இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கல்வி நிர்வாக அலுவலர்கள் சங்கம் யாழ். மாவட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் கல்வி நிர்வாக அலுவலர்கள் ஒன்றுசேர்ந்து கல்வி நிர்வாக சேவை அலுவலர் சங்கம் என்கின்ற இந்த அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இதன் தலைவராக திரு. இ. சிவானந்தனும் செயலாளராக திரு. நா சண்முகநாத பிள்ளையும் தெரிவு செய்யப்

உறுப்பினர்களின் நலன்களைப் பேணி மேம்படுத்துவதுடன் உறுப்பினர்களின் உரிமைகளுக்காக உழைக்கவுள்ளது.

மேலும் ஆசிரிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக உழைக்கவுள்ளதாகவும் அதன் நோக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் தொடர்பில் எதிர்வரும் 17-ம்திகதி அன்று யாழ். இந்துக்கல்லூரியில் கருத்தரங்கொன்றும் நடைபெறவுள்ளது.

இச் சங்கம் நாளடைவில் பல இடங்களிற்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக யாழ்.

## திருமலை - பொலநறுவையில் ராணுவ நடவடிக்கையாம்

(கொழும்பு)

திருமலை பொலநறுவை மாவட்டங்களின் எல்லையில் படையினர் தற்போது கிராமப்

படுவதாக கொழும்பில் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். புலிகளின் தளங்களை தேடியழிக்கும் முயற்சி

## பலாலி விமான தள பகுதியில் குண்டுவீச்சு விமானப் பயிற்சி

(மானிப்பாய்)

பலாலி இராணுவ முகாம் அமைந்துள்ள விமான இறங்கு தளத்தில் குண்டுவீச்சு விமானங்கள் பல தடவைகள் சுற்றிப் பறப்பதும், தரையிறங்குவதாகவும் கூறப்படுகின்றது. இதன்படி புக்காரா மற்றும் குண்டுவீச்சு விமானங்கள் அடிக்கடி மேலெழுந்து பறந்து பயிற்சிகளில் ஈடுபடுவதாக கூறப்படுகின்றது.

இது பற்றி ஏழாலைப் பகுதியில் வசித்து வரும் ஒருவர் கூறுகையில்; இவ் விமானங்கள்

வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று மிகுந்த கவலையுடன் தெரிவித்தார். (07)

## தற்கொலை படை அங்கி பரீட்சிக்க இந்திய குழு

(கொழும்பு)

முகத்துவாரம் கடற்கரையில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட தற்கொலை படையினர் உபயோகிக்கும் உபகரணங்களை பரீட்சிக்க இந்திய புலனாய்வுக் குழு ஒன்று விரைவில் கொழும்பு வரவுள்ளது.

டெனிம் காற்சட்டையில் பொருத்தப்பட்ட 3. 5 கிலோ ஆர். டி. எக்ஸ் வெடிமருந்தும் மற்றும் ஒரு கிலோ சன்னங்களும் ஒரு பெட்டியில் அடை

(3ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்

## நரோமாவில் 20 பயணிகள்

(வடமராட்சி)

திருக்கோணமலை காங்கேசன்துறைக்கான 'நரோமா' கப்பல் பயணிகள் சேவை நேற்று நடைபெற்றது. திருக்கோணமலையிலிருந்து 61 பயணிகள் வந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இக்

(3ஆம் பக்கம் பார்க்க)

னர். இதில் வாய்ப்பாட்டுக்கு 14 பேரும், வீணை, பண்ணிசைக்கு ஒவ்வொருவரும், பர

நெறிக்கு மொத்தம் 57 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [சி]

## கல்வி நிர்வாக அலுவலர் சங்கம் யாழ். இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கல்வி நிர்வாக அலுவலர்கள் சங்கம் யாழ். மாவட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் கல்வி நிர்வாக அலுவலர்கள் ஒன்றுசேர்ந்து கல்வி நிர்வாக சேவை அலுவலர் சங்கம் என்கின்ற இந்த அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இதன் தலைவராக திரு. இ. சிவானந்தனும் செயலாளராக திரு. நா சண்முகநாதபிள்ளையும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இச் சங்கம் கல்விச் சங்க உறுப்பினர்களின் நலன்களைப் பேணி மேம்படுத்துவதுடன் உறுப்பினர்களின் உரிமைகளுக்காக உழைக்கவுள்ளது.

மேலும் ஆசிரிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக உழைக்கவுள்ளதாகவும் அதன் நோக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் தொடர்பில் எதிர்வரும் 17-ம்திகதி அன்று யாழ். இந்துக்கல்லூரியில் கருத்தரங்கொன்றும் நடைபெறவுள்ளது.

இச் சங்கம் நாளடைவில் பல இடங்களிற்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

ஆண்டு ஒக்டோபரில் வரும் இராணுவதினத்திற்கு முன்பாக வடக்கு-கிழக்கில் 'பயங்கரவாதத்திற்கு' முடிவுகட்டி சமாதானத்தை நிலைநாட்டுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை முற்றுகையினால் புலிகளின் ஆதிக்கத்தை சுக்குநூறாக்கிவிட்டோம். இந் நடவடிக்கை எமக்கு பல பாடங்களைப் புகட்டியுள்ளது: நாம் புலிகளை எதிர்கொண்டு பலத்த எதிர்ப்பின் மத்தியில்

களைப் பின்னடையச் செய்யலாம் என்பது தெரிகிறது. பெரும் பிரதேசத்தை நாம் கைப்பற்றினோம். முறையாக திட்டமிட்டால் வெற்றியீட்ட முடியும் என்பதை இந் நடவடிக்கை நிரூபித்துள்ளது.

எங்கள் இராணுவம் மிகப் பெரியதாகும். எல்லோரையும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் கூட்டி உரை வழங்க என்னால் முடியாது. எங்கள் இராணுவம் இன்று 44ஆண்டுகளைப் பூர்த்தியாக்கும் இவ் வேளையில் ஒரு திடமான

பலமானவர்கள். அவர்களுக்கு ஒரு நோக்கு உண்டு. அவர்களுக்கு ஏதும் சந்தேகங்கள் இருப்பின் அதை தணிப்பதற்

நடாத்துகிறோம். இதை ஒவ்வொரு வருடமும் நடத்த வேண்டுமென எதிர்கால தளபதிகளை வேண்டுகிறேன் என்றார்.

## திருமலை - பொலநறுவையில் ராணுவ நடவடிக்கையாம்

(கொழும்பு)

திருமலை பொலநறுவை மாவட்டங்களின் எல்லையில் படையினர் தற்போது கிரான்ட்ஸ்லாம் எனும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கொழும்பில் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். புலிகளின தளங்களை தேடியழிக்கும் முயற்சி இது என அவர் மேலும் தெரிவித்தார்.

## பலாலி விமான தள பகுதியில் குண்டுவீச்சு விமானப் பயிற்சி

(மானிப்பாய்)

பலாலி இராணுவ முகாம் அமைந்துள்ள விமான இறங்கு தளத்தில் குண்டுவீச்சு விமானங்கள் பல தடவைகள் சுற்றிப் பறப்பதும், தரையிறங்குவதாகவும் கூறப்படுகின்றது. இதன்படி புக்காரா மற்றும் குண்டுவீச்சு விமானங்கள் அடிக்கடி மேலெழுந்து பறந்து பயிற்சிகளில் ஈடுபடுவதாக கூறப்படுகின்றது.

இது பற்றி ஏழாலைப் பகுதியில் வசித்து வரும் ஒருவர் கூறுகையில்; இவ் விமானங்கள் மிகுந்த பேரிரைச்சலுடன் தம் இருப்பிடங்களுக்கு மேலாக அடிக்கடி வட்டமிட்டு பறப்பதாகவும், சில வேளைகளில் மேலிருந்து கீழே குத்தென வந்து திடீரென மேலெழுவதாகவும் கூறுகின்றார். இதனால் இங்கு வாழும் மக்கள் மிகுந்த பயப்பீதியுடன் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று மிகுந்த கவலையுடன் தெரிவித்தார். (07)

## நரோமாவில் 20 பயணிகள்

(வடமராட்சி)

திருக்கோணமலை காங்கேசன்துறைக்கான 'நரோமா' கப்பல் பயணிகள் சேவை நேற்று நடைபெற்றது. திருக்கோணமலையிலிருந்து 61 பயணிகள் வந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இக்

(3ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலை படை அங்கி பரீட்சிக்க இந்திய குழு

(கொழும்பு)

முகத்துவாரம் கடற்கரையில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட தற்கொலை படையினர் உபயோகிக்கும் உபகரணங்களை பரீட்சிக்க இந்திய புலனாய்வுக் குழு ஒன்று விரைவில் கொழும்பு வரவுள்ளது.

டெனிம் காற்சட்டையில் பொருத்தப்பட்ட 3.5 கிலோ ஆர். டி. எக்ஸ் வெடிமருந்தும் மற்றும் ஒரு கிலோ சன்னங்களும் ஒரு பெட்டியில் அடை

(3ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை உடன் நிறுத்த வை.எம்.சி.ஏ. கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு அப்பகுதி மக்களின் அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும் என்று மட்டக்களப்பிற்கு சனியன்று விஜயம் செய்த தென்னிலங்கை வை. எம்.சி.ஏ பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பதினேழு பேரைக்கொண்ட இக் குழு வாழைச்சேனை கல்லாறு, களுவாஞ்சிக்குடி ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்து அப்பகுதி பொது மக்களுட

(3ஆம் பக்கம் பார்க்க)

# 'யாழ்தேவி' சமரில ராணுவ பேரிழப்பு; புலிகள் வழங்கிய முன்னெச்சரிக்கை!

'விடுதலைப்புலிகளின் பிரதேசத்திற்குள் நுழைந்தால் மரணமே'' என்ற செய்தியை புலிகள் ஒவ்வொரு சிப்பாய்க்கும் தெற்கில் ஆட்சேர்ப்பு நடைபெறும் பகுதிகளுக்கும் 'யாழ்தேவி' ராணுவ நடவடிக்கையின் போது கொடுத்துள்ளனர் என யாழ்தேவி நடவடிக்கை தோல்வி குறித்து சண்டே ஐலன்ட் தனது ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது.

அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- மேற்படி இராணுவ நடவடிக்கை படையினரின் பலவீனங்களை காட்டுவதாக அமைந்துள்ளது.

படையினர் மத்தியில் போதியளவு பயிற்சியின்மை நிலவுகிறது புதிதாக சேர்க்கப்படுபவர்களுக்கு குறைந்த கால பயிற்சி வழங்கப்படுகிறது. குறைந்தளவு பயிற்சிகொண்ட இப்படையினரை போர்க்களத்தில் விடும்போது விடுதலைப் புலிகள் போன்ற உறுதி மிக்க எதிரி முன்பாக போரிடுவது கடினம். யாழ்தேவி நடவடிக்கையில் படை சிப்பாய்களிடையிலான தொடர்பும் ஆதரவும் மோசமானதாக இருந்துள்ளது, ஒவ்வொரு படைப் பிரிவும் ஒன்று மற்றொன்றின் பலத்தையும் பலவீனத்தையும் சிறிதளவே அறிந்து வைத்திருந்தன,

கிளாலியை தக்க வைத்துக் கொள்ள அதிகளவு படையினர் தேவை அத்துடன் 20 மைல் நீளத்திற்கு நிறுத்தப் படும் படையினருக்கான கடல்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## இரண்டாவது நாளிலேயே தடம்புரண்ட 'யாழ்தேவி'

[கொழும்பு]

முன்னைய ஆண்டுகளில் விரைவாக யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்த யாழ்தேவி ரயிலைப் போலவே ''ஒபரேசன் யாழ்தேவி''யும் பல்வேறு கட்ட செயலாக்கத்திற்கு ஊடாக யாழ்ப்பாண நகரைச் சென்றடையும் என்றுதான் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இரண்டாவது நாளிலேயே அது தடம்புரண்டு புறப்பட்ட இடத்திற்கே மீண்டும் திரும்பவேண்டியதாகி விட்டது. இவ்வாறு ''ஒப்பரேசன் யாழ்தேவி'' நடவடிக்கைபற்றி சண்டே ரைம்சின் பாதுகாப்பு விவகார பத்தியாளர் குறிப்பிட்டுள்ளார். அவர் இது பற்றி மேலும் குறிப்பிடுகையில், கிரிக்கட் விளையாட்டில் பெயர்பெற்ற வீரர்களான கிரக்சப்பல் இயன்போத்தம், ரிச்சர்ட் ஹாட்லீ போன்ற

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## காலியில் பொலிசார் சூடு 2 பொதுமக்கள் பலி; பலர் படுகாயம்

தென் மாகாண ஆளுனர் பாக்கீமாக்காரின் பலத்தஎதிர்ப்பிற்கு மத்தியில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மாகாணசபை உறுப்பினர் அமரசிறி தொடங்கொட முதல் அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதைத் தொடர்ந்து பொலிசார் நடத்திய தாக்குதலில் இருவர் பலியானதுடன் பாடசாலை மாணவர் உட்பட பலர் படுகாயமடைந்தனர்.

முதலமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட அமரசிறி தொடாங்கொட செயலகத்தை விட்டு வெளியேறும்போது பொலிசார்மீது ஒரு குழுவினர் கற்களை வீசித் தாக்குதல் நடாத்தினர். இதைத் தொடர்ந்தே பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

## புலோப்பளை சமர் வீடியோ உலகம் முழுவதும் ஒளிபரப்பு

(கொழும்பு)

புலோப்பளை சமரில் புலிகள் பெற்ற வெற்றி அவர்களின் பிரசாரத்திற்கு மிகவும் உதவியுள்ளது. புலோப்பளை சமர் குறித்த வீடியோப் படங்கள் எப்படியோ உலக தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுவனமாகிய சி.என்.என்னிற்கு புலிகளால் அனுப்பப்பட்டு உலகம் முழுவதும் ஒளிபரப்பட்டுள்ளது என சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது,

மேலும் ஒப்பரேஷன் யாழ். தேவி படையினர் கிளாலியிலிருந்து வாபஸ் பெற்றமைக்கு அப்பகுதி மழைக் காலத்தில் கடினமான பிரதேசமாக இருக்கும் என்பதினாலேயே என இராணுவத் தரப்பில் கூறப்படுகிறது, இது உண்மையில் முட்டாள்தனமான அறிவிப்பு இது நடவடிக்கை திட்டமிடப்படும் போது கருத்திற் கொள்ளப்பட்டிருக்க வேண்டிய ஒரு விடயம், இது திட்டமிடலில் உள்ள பலவீனமே, இவ்வாறு வெற்றியாளர்கள் இல்லாத சமர் என்ற தலைப்பில் சண்டே ரைம்ஸ் பாதுகாப்புத் துறை செய்தியாளர் எழுதிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## புயல்போல் வந்து புலிகள் தாக்கினர்

(கொழும்பு)

பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்ட யாழ்தேவி நடவடிக்கை எதிர்பாராத தோல்வியைத் தந்துள்ளது என பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் லக்தீப பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

யாழ் தேவி நடவடிக்கையில் சாவகச்சேரி வரை முன்னேற இராணுவம் திட்டமிட்டது. 25 நாட்களுக்கு நடைபெற

(3ஆம் பக்கம் பார்க்க)

## திசை மாறிய படகு கடற்புலிகள் மீட்பு

[யாழ்ப்பாணம்]

கிளாலிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் பயணத்தை மேற்கொண்ட சமயம் திசை மாறிச்சென்ற 13 பயணிகளைக் கொண்ட பயணிகள் படகு ஒன்றை கடற்புலிகள் நேற்று மீட்டெடுத்தனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12.00 மணியளவில் ஆலங்கேணிக்கரையில் இருந்து புறப்பட்ட மேற்படி படகு திசை மாறிச்சென்று சுமார் நான்கு மணிநேரமாக கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தது. பின்னர் அடையாளம் கண்டு கொள்ள முடியாத மணற்பாங்கான ஒரு கரையைச் சென்று ஒதுங்கியது.

(4ஆம் பக்கம் பார்க்க)

ஷப்ரா யுனிக்கோ நிதி நிறுவனம்

## மூன்று வருட காலத்தில் பணம் வழங்க இணக்கம்

(கொழும்பு)

ஷப்ரா யுனிக்கோ நிதி நிறுவனம் தனதுவாடிக்கையாளர்களுக்கு மூன்று ஆண்டுகளில் பணத்தை திருப்பிக் கொடுக்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இவ்விபரத்தை நீதி அமைச்சரும் நிதிராஜாங்க அமைச்சருமான ஹரோல் ஹேரத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த நிதி நிறுவனம் 1-9-1993 தொடக்கம் மூன்று வருட காலத்தில் பணத்தை திருப்பிக் கையளிக்க இணங்கியுள்ளது என்று அவர் அங்கு தெரிவித்தார்.

குறிப்பிட்ட காலத்திற்குள் பகுதிபகுதியாக பணத்தை திருப்பிக்கொடுப்பதற்கு இந்த நிறுவனம் முன்வந்திருக்கிறது.

## வங்கிகளுக்கு மண்ணெய் வழங்க அரச அதிபர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வங்கிகளிற்கு மண்ணெண்ணெய் பெற்றுக் கொடுத்த யாழ். அரச அதிபர் தற்சமயம் அவற்றிற்கு மண்ணெண்ணெய் பெற்றுத்தர முடியாதென தெரிவித்துள்ளதாக வங்கி வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இதனை அடுத்து வெளியில் சந்தை விலைக்கு தமக்குத் தேவையான மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வ

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### வியாழ மாற்றம்

12-10-93 வியாழ மாற்றம், 15 10-93 சனிவக்கிமாற்றம் 31-10-93 செவ்வாய்மாற்றம், 10 11-93 சனிமாற்றம் (மீண்டும் கும்பத்திற்கு) எங்கும் விற்பனையாகின்றது. ரூ 10/ கனகா ரேடர்ஸ். திருநெல்வேலி சந்தி. ஆசிரியர் சத்யா. (6267)

### லலிதா சகஸ்ரநாமம்

லலிதா சகஸ்ரநாமம்(கிரந்தலிபி)வெளிவந்துள்ளது. சுப்பிரமண்ய சகஸ்ரநாமமும் உண்டு. தேவையானோர் தொடர்புகொள்க. சோ. நிர்மலேஸ்வர சர்மா, முருகமூர்த்தி கோவில், நவாலி. (சி-7545)

### உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள-டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-7570)

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

தென்மராட்சியில் நடந்த வன்செயல்கள் காரணமாக இடை நிறுத்தப்பட்ட எமது சேவை தொடர்ந்து மீண்டும் இயங்கிக் கொண்டு இருக்கின்றது என்பதை வாடிக்கையாளர்கட்கு அறியத் தருகின்றோம். தங்கள் ஆதரவிற்கு நன்றி. டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ். கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-7569)

### வடமராட்சி விவசாயிகளே

மண்ணுக்கு வளமூட்டி, தாக்கும் பூச்சிகளிடமிருந்து பயிரைப் பாதுகாத்து அபரிமிதமான விளைச்சல் பெற நீமியா உரம் பயிருக்கு ஊட்டமளிக்க "சக்தி" இயற்கைப் பசளை வடமராட்சியில் புலோலி, அம்பனை கமநல சேவை நிலையங்களில் விற்பனையாகின்றன. 'மீல்க் வைற்' (சி-7587)

### சீமெந்து தொழிற்சாலை ஊழியர் வேதனம்

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை, புரட்டாதி மாதத்திற்கான வேதனம், இன்றும் இலங்கை வர்த்தக வங்கி, யாழ்ப்பாணத்தில் காலை 9.00 மணி முதல் வழங்கப்படும் என பிரதம கணக்காளர் அறிவித்துள்ளார்.

வடமராட்சியில்

**COLLEGE OF NEPTUNES**

ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும்

பொருளியல்
வரதராஜன்

10 1.30 — Day Class
2.30 4 30 — 94
4.30 6.30 — 95

**01.11 93**

G. A. Q.
வகுப்புகள்
ஆரம்பமாகின்றன.

யாழ். பிரபல ஆசிரியர்களால்கற்பிக்கப்படும். பதிவுகள் ஏற்கப்படும். (சி 7582)

## 5-ம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
30-05-1969

மாவீரனாய்
13 10-1988

### கப்டன் கரிகாலன்

(பொன்னம்பலம் கௌரிபாலன்)

"மரணங்கள் முடிவல்ல மாவீரன் பாதையிலே
கல்லறையும் பிரசவிக்கும் பலநூறு வீரர்களை
நிகரற்ற தலைமையிலே நிழலொற்றிப் போகும்
களைகளற்ற வான்வெளியில் காத்திருப்பாய் -
கரிகாலா
நின்தாகம் தணிக்கும் சுபவேளை விரைந்து வரும்".

உன் நினைவில் வாழும்
குடும்பத்தினர்

வரணி வடக்கு,
வரணி. [6271]

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

அன்னையின் அருகில்
27 — 06 — 1930



ஆண்டவரின் அடியில்
18 — 09 — 1993

### திரு. சின்னத்தம்பி சுந்தரம்

திகதி: 13 10 1993

அன்பின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்த
எம் ஆருயிர் தந்தையே, எங்களை பிரிந்து
ஒரு மாதம் ஆனாலும் உங்கள் நினைவலைகள்
மாறாதே.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக (13 10-1993) இன்று நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

வீரபத்திர கோவிலடி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (6251)

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
01 02 934

விண்ணில்
24 9 1992

அமரர்

### திரு. சி. சிவகுரு

(கமநலசேவை உதவி ஆணையாளர்)
[திருமலை]

திகதி: 13 10 1993

## எங்களால் மட்டுமே இது முடியும்!

PAPER CLASS

ஆரம்பம்
**14-10-93**

பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

### யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-7586)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கேள்வி அறிவித்தல்

1. பின்வருவன வற்றிற்குக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன:

a. யாழ்ப்பாணப்பல்கலைக்கழக துணைவேந்தரின் உபயோகத்திற்காக, வாடகைக்கு, டீசலில் இயங்கும் ஒரு மோட்டார் கார்.

b. யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தினால் கொள்வனவு செய்வதற்கு டீசலில் இயங்கும் பாவித்த ஒரு மோட்டார் கார்.

2 கேள்விதாரர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து பெறப்பட்ட (ஒவ்வொரு கேள்விப் பத்திரத்துக்கும்) மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 200/- செலுத்தியதற்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளரிடமிருந்து கேள்விப்பத்திரங்களை 19 10-93 வரை பெற்றுக்கொள்ளலாம்.

3 கேள்விப் பத்திரங்களை சட்டணமெதுவுமின்றி யாழ்ப்பாணப்பல்கலைக்கழக திட்டமிடல் கிளையில் வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளரிடம் 22-10-93 காலை 10 00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

5. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கேள்விச் சபைக்கு உண்டு.

— பதிவாளர்
த. பெ. இலக்கம் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(சி-7574)

## நினைவு கூருகின்றோம்... 1993-10-13

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் கோப்பாயில் இந்

வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் அளிக்கும்

## நிதி உதவி கலை நிகழ்ச்சிகள்



இடை நிறுத்தப்பட்ட எமது சேவை தொடர்ந்து மீண்டும் இயங்கிக் கொண்டு இருக்கின் றதுஎன்பதைவாடிக்கையாளர் கட்கு அறியத் தருகின்றோம். தங்கள் ஆதரவிற்கு நன்றி. டிஸ்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-7569)


நிகரற்ற தலைமையிலே நிழலொற்றிப் போகும்
களைகளற்ற வான்வெளியில் காத்திருப்பாய் -
கரிகாலா
நின்தாகம் தணிக்கும் சுபவேளை விரைந்து வரும்''.

உன் நினைவில் வாழும்

வரணி வடக்கு,
வரணி. [6271]
குடும்பத்தினர்

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் அளிக்கும்

# நிதி உதவி கலை நிகழ்ச்சிகள்



**இடம்: சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானம் காலம்: 16.10.93 நேரம்: இரவு 6.00 மணி**

## நிகழ்ச்சிகள்

1. பருத்திநகர் சாண்டோ எம் துரைரெத்தினம் அவர்களினால் நடாத்தப்படும் ''வீரதீரச் செயல்கள்'' முதல்முறையாக யாழ் நகரில் அரங்கேறவுள்ளது.

(அ) நெருப்பு புதைகுழியில் சில மணிநேரம் படுத்திருத்தல்.
(ஆ) இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்.
(இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்.
(ஈ) ஓடும் வாகனத்தை கொண்டையினால் இழுத்தல்.
(உ) 35கிலோஎடையுள்ளஇரும்புக்குண்டினை 7அடிஉயரத்திலிருந்து வயிற்றில்ஏந்துதல்.
(ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பின்மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்.
(எ) (3''200 ஆணி) அடிக்கப்பட்ட படுக்கை மீது படுக்க வைத்து மார்பு மேலாக பாரம் உடைய உழவு இயந்திரத்தை ஏற்றுதல்.
(ஏ) துரைரெத்தினம் வாயால் மோட்டார் சைக்கிளை தூக்குதல்.

2. மோகன்மாஸ்டர் அவர்களினால் நடாத்தப்படும் கராட்டிவிளையாட்டுக்கள்.
3 கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்
4. கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் நாடகம்.

### டிக்கெற் கிடைக்குமிடம்:

| | |
|---|---|
| ''வெஸ்கோ'' | ஆஸ்பத்திரி வீதி, யாழ். |
| ''குறிஞ்சி'' | திருநெல்வேலி சந்தை |
| ''நாதன் மருந்தகம்'' | கல்வியங்காடு |
| ''தாவடி மெடிக்கல்ஸ்'' | கோண்டாவில் |
| ''மெடிஇஸ்குயர்ஸ்'' | மானிப்பாய் |
| ''மெடிப்பிளஸ்'' | சங்கானை |
| ஸ்ரீமுருகன் | - நெல்லியடி பருத்தித்துறை |
| ''அம்பாள் பாமசி'' | சாவகச்சேரி |

அனைத்து தமிழீழ வர்த்தகர்களையும், பொது மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
முக்கியகுறிப்பு: யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். சிரமத்துக்கு மன்னிக்கவும்.

நன்றி.

(இ/7533) வ யா ஆ. ம. வ. சங்கம்



மண்ணில்
01 02 934

விண்ணில்
24 9 1992

அமரர்

## திரு. சி. சிவகுரு

(கமநலசேவை உதவி ஆணையாளர்)
[திருமலை]

மறைவு: 13 10 1993

வற்றாத பாசத்தால் வளர்த்தெடுத்தவரே
நெற்றாகி நினைந்துருக விட்டதென்ன காரணமோ
பூண்ட புகழாலே பிறர்போற்ற நின்றீர்கள்
ஆண்டொன்று போனது ஆறவில்லைச் சோகம்
நீங்கா நினைவாக நெஞ்சில் இருப்பவரே

என்றும் எங்கள் அஞ்சலிகள்.

''வெல்லன்''
மத்தொனி,
கரவெட்டி. (6261)

மனைவி, மக்கள்,
மருமக்கள்.

## 6-ம் ஆண்டு நினைவுநாள்



பிறப்பு:
02. 08 70

வீரச்சாவு:
13. 10. 87

## 2-ம் லெப். சண்

(ஜெகராசா ஜெயசீலன்)

13. 10 87 அன்று கோப்பாயில் இந்தியப் படையுடன் நேரடி மோதலில் வீரச்சாவு அடைந்த எங்கள் அன்பான செல்வமே, எதிரியின் குண்டை நெஞ்சிலே ஏற்று கோப்பாய் மண்ணிலே உனது இறுதி மூச்சு நின்றதையா. மானம் ஒன்றே பெரிது. மக்களை காப்பது உறுதி என்றாய். உயிரை தடங்கல் எதுவுமின்றி தானம் செய்வோம் என்றாய். அன்புக் கோபிலே உனது ஆத்ம சாந்திக்காக மலர்ப் பாதங்களிற்கு மலரிட்டு வணங்குகின்றோம்.

சண் வீடு.
வேலம்பிராய்,
தச்சன் தோப்பு.

உனது பிரிவை தாங்காது தவிக்கும்
அப்பா, அம்மா,
உடன் பிறப்புக்கள்.

(6272)

...டை கைக்கு, டீசலில் இயங்கும் ஒரு மோட்டார் கார்.

6. யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தினால் கொள்வனவு செய்வதற்கு டீசலில் இயங்கும் பாவித்த ஒரு மோட்டார் கார்.

2 கேள்விதாரர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து பெறப்பட்ட (ஒவ்வொரு கேள்விப் பத்திரத்துக்கும்) மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்ட...

...மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

5. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கேள்விச் சபைக்கு உண்டு.

— பதிவாளர்

த. பெ. இலக்கம் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி-7574)

## நினைவு கூருகின்றோம்...
## 1993-10-13

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் கோப்பாயில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**பிரேமன்** (சோமசுந்தரம் இளங்கோ - சாரதா வீதி, சங்கத்தானை - சாவகச்சேரி - யாழ்)

யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். அன்றூ** (மு. கிங்ஸ்லி-கொக்குத்தொடுவாய் - மணலாறு

**அமல்** (நிக்கலஸ் அருள்வாசன் - பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல் - மன்னார்)

**தியூமன்** (சிற்றம்பலம், பாஸ்கரன் - ஆலங்கேணி, பூநகரி மன்னார்)

**2-ம் லெப். நவாஸ் / ரவி** (பழனிவேல் நவீந்திரன் -வல்வெட்டித்துறை)

**2 ம் லெப். சந்திரன்** (இராசதுரை ஜெயச்சந்திரன்- திருநெல்வேலி யாழ்)

**2-ம் லெப் சண்** (ஜெகராசா ஜெயசீலன் - வேலம்பராய் தச்சன்தோப்பு - யாழ்)

யாழ் - கோண்டாவில், காரைக்கால் பகுதியில் இந்தியப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**அக்பர்** (அருணாசலம் பாலகுமார் - கலைவாணிவீதி, கோண்டாவில் வடக்கு - யாழ்)

**ராஜன்** (இராசதுரை இலங்கேஸ்வரன் - தாவடி, கொக்குவில் - யாழ்)

யாழ் - சுன்னாகத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான நாடக நெறியாளர் வீ எம். குகராசா

1988ஆம் ஆண்டு கொக்குவில், கேணியடிப்பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில்வீரச்சாவெய்திய

**கப்டன் கரிகாலன்** (பொன்னம்பலம் கௌரிபாலன்- வரணிவடக்கு, கொடிகாமம் யாழ்)

யாழ் - காங்கேசன்துறைவீதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**டிஸ்கோ ரவி** (அருளானந்தன் ரவி)

மற்றும் தெல்லிப்பழை, இணுவில் பகுதிகளில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான இருவர்.

1990ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞன் உட்பட 02 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவு 4-ம் கட்டை சிறிலங்கா இராணுவ மினிமுகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய-

**லெப். நேசன்** (சின்னத்தம்பி சற்குணசீலன் - முள்ளியவளை - முல்லைத்தீவு)

**லெப். சூரி / கிரி** (மாரிமுத்து வசந்தகுமார் - 4 ம் வட்டாரம், வேலணை - யாழ்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி, 7584)

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

கெடு குடி சொற் கேளாது.
- தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 13-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

## சோமாலியப் படிப்பினை

கடந்த சில தினங்களுக்குள் சோமாலியா தொடர்பான அமெரிக்காவின் அணுகுமுறையானது தலைகீழாக மாறியுள்ளது. இதுவரை அமெரிக்கத் துருப்புக்கள் எதிர்த்துப் போராடி வந்த கிளர்ச்சிக்காரரான ஜெனரல் அய்டீட்டுடன் சமரசம் செய்து 'கொள்ளவும், யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கவும், அமெரிக்கா தயாராகவுள்ளதோடு, சோமாலிய அரசாங்கத்தில் அவருக்கு இடம் அளிக்கவும் முன்வந்துள்ளது.

அமெரிக்காவின் இத் திடீர் மனமாற்றத்திற்கு, அவர்களின் இராணுவ ஹெலிகப்டர் ஒன்று ஜெனரல் அய்டீட்டின் கிளர்ச்சிக்காரர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டமையும், அதில் இருந்த அமெரிக்க சிப்பாய்கள் 12 பேர் கொல்லப்பட்டமையும், சிலர் கைது செய்யப்பட்டமையுமே காரணமாகும்.

அமெரிக்க இராணுவத்தின் எண்ணிக்கைக்கும், அவர்களின் ஆயுத தளபாட பலத்திற்கும், தொகைக்கும் கொல்லப்பட்ட சிப்பாய்களின் எண்ணிக்கையோ, சுட்டு வீழ்த்தப்பட்ட ஹெலிகப்டரின் பெறுமதியோ பெரிய தொன்றல்ல. இதனை அமெரிக்காவால் தாங்கிக் கொள்ள முடியாது என்பதும் அல்ல.

ஆனால், அமெரிக்கா மோதலைத் தவிர்த்து சமாதானம் நோக்கி விரைந்து செல்லப் பார்க்கின்றது. 'பயங்கரவாதி' என்றும், கொலைக் குற்றவாளி எனவும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அமெரிக்க இராணுவத்தால் தேடப்பட்டுவந்த நபருடன் சமரசம் செய்து கொள்ள முற்படுவதுடன், சோமாலிய அரசாங்கத்தில் அவருக்குப் பங்களிக்கவும் தயாராக உள்ளது.

அமெரிக்காவின் இத் திடீர் மாற்றத்திற்கு சோமாலியாவில் கொல்லப்பட்ட சில பத்து அமெரிக்க இராணுவத்தினரின் இழப்பு காரணமல்ல. வியட்நாமில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரின் இழப்பே காரணமாகும். அதாவது, மீண்டும் ஒரு வியட்நாமாக சோமாலியா அமெரிக்கப் படைகளுக்கு மாறிவிடக் கூடாது என்ற முன்னைய படிப்பினையே காரணமாகும்.

வியட்நாமில் அமெரிக்காவிற்குக் கிடைத்த கசப்பான படிப்பினையை அமெரிக்க நிர்வாகமும், மக்களும் மறந்துவிடவே விரும்புகின்றனர். ஈராக்கிற்கு வளைகுடா

# "ராணுவத்துடன் கைகலக்குமளவில் புலிகள் நேருக்குநேர் வந்தனர்"

## சிங்கள சிப்பாய்களுக்கு துயரில் முடிந்த யாழ்தேவி சமர்

செப்டெம்பர் 28

இலங்கை இராணுவத்தின் காலாட்படையைச் சேர்ந்த சிங்க மற்றும் கெமுனு படைப் பிரிவுகள் ஆனையிறவு இராணுவ முகாமின் முன்னணிப் பாதுகாப்பு அரண்களிலிருந்து காலையில் கிளாலியை நோக்கி நகரத் தொடங்கியிருந்தன. மேஜர் ஜெனரல் றோகான் தலுவத்தையால் தயாரிக்கப்பட்ட ஒப்பரேசன் யாழ்தேவியின் இறுதிக்கட்ட ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக அப்போது முப்படைத் தளபதிகளும் ஆனையிறவு முகாமில் சந்தித்துக்கொண்டனர். இச் சந்திப்பின் முடிவில் கடற்படைத் தளபதி காரைநகருக்கும், விமானப் படைத்தளபதி பலாலிக்கும் சென்றனர். இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்னா மட்டும் துருப்புகளுடன் தளத்தில் நின்றார். மூன்று கட்டங்களாக செயல்படுவதற்கு இந்த இராணுவ நடவடிக்கை திட்டமிடப்பட்டு இருந்ததாம்.

அன்று பிற்பகல் 4-30 மணி வரையும் பலத்த எதிர்ப்புகள் எதுவுமின்றி சுமார் எட்டு கிலோ மீற்றர் தூரம் வரை முன்னேறி முதலாவது கட்ட நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டது. அங்கும் இங்குமாக சில மோட்டார் ஷெல்கள் புலிகளால் ஏவப்பட்டுக் கொண்டும், துப்பாக்கிச் சூடுகள் சில நடத்தப்பட்டுக் கொண்டும் இருந்த போதிலும், ஒப்பீட்டு அளவில் மிகக் குறைந்த எதிர்ப்பே இதன்போது புலிகளால் காட்டப்பட்டிருந்தது. இராணுவத்தில் 28 பேர் மட்டுமே காயப்பட்டிருந்தனர். இது வழமையான ஒன்றுதான். மற்றும் எந்த அசம்பாவிதங்களுமின்றி இரவு முகாமில் நீடித்தது.

செப்டெம்பர் 29.

மறு நாள் காலையில் முதல் நாள் போல சுமுகமாக இரண்டாவது கட்டத்தைப் பூர்த்தி செய்யலாம் என்றே நம்பப்பட்டது. சுமார் 1500 யார் தூரம் படையினர் முன்னேறிய நிலையில் நிலைமை முற்றிலும் தலைகீழாக மாறியது. சுமார் பத்து மணி அளவில் நிலைமை மிக மோசமாகியது. படையின் முன்னணியில் வழி நடத்திச் சென்ற கேணல் சரத் பொன்சேகா கூறுகையில், ''நாலாபுறமும் இருந்து மோட்டார் ஷெல்கள் மழை போல் புலிகளால் ஏவி விடப்பட்டன. அவை படையினர் மத்தியில் விழுந்து வெடித்தன. சுமார் அரைமணி நேரத்திலுள் 160 பேர் காயமடைந்ததுடன் பலர் உயிரிழக்கவும் நேரிட்டது. சற்றும் எதிர்பாராத இத் திடீர் தாக்குதலால் படையினர் அதிர்ச்சியுற்றனர். தென்னை மரங்களுக்கிடையிலும் பற்றைக் காடுகளுக்கு இடையிலும் மறைந்திருந்து தாக்குதல் நடத்திய புலிகளை இனங் காண்பதே இக்கட்டத்தில் கடினமாக இருந்தது. இதன் பிறகு முன்னேறிய புலிகள் நேருக்கு நேராக வந்தனர். நேரடிக் கைகலப்பு என்று கூறுமளவிற்கு அவர்கள் மிக நெருங்கி வந்து விட்டனர். என்று தெரிவித்தார். தற்சமயம் இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் அவர் மேலும் கூறுகையில், 'சுமார் 1000 பேர் என மதிக்கத் தக்க அளவுள்ள புலிகள் எமக்கு நேர் முன்னாக நின்று துப்பாக்கிகளால் சுட்டனர். நாங்கள் பின்னடைய வேண்டியதாயிற்று. சுமார் 50 யார் தொலைவுக்குள் நின்ற அவர்கள் இலக்குப்பார்க்காமலேயே எம் மீது துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர். இரண்டாவது நாளில் அவர்கள் மிகவும் திட்டமிட்ட முறையில் ஒழுங்கு படுத்தப்பட்ட தாக்குதலை எம் மீது தொடுத்தனர். முதல் நாள் நடவடிக்கைக்குப் பின்னர் நாம் திரும்பிச் சென்று விடக் கூடும் என்றேஅவர்கள் எதிர்பார்த்து இருக்கக் கூடும். ஆனால் எமது நடவடிக்கைகளைநன்கு அவதானித்த பின்னர் அவர்கள் திட்டமிட்டு தாக்கினர். நாம் நரகக் குழிக்குள் தள்ளப்பட்டது போலானோம். நூற்றுக் கணக்கானோரை நாம் இழந்தோம்'' எனக் குறிப்பிட்டார்.

கெமுனு படைப் பிரிவைச் சேர்ந்தவரும், காயமுற்று தற்சமயம் இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருப்பவருமான கோப்ரல் எஸ் ஏ. பண்டார கூறுகையில், ''இந்த நடவடிக்கைகள் தரையில் முன்னேறுவது தொடர்பாகப் படையினருக்கு நல்ல படிப்பினையாக அமைந்தன எனலாம். பிற்பகல் 2.30 மணிக்குப் பின்னர்தான் படையினர் மீள ஒழுங்குபடுத்தப்பட்டனர். 3.30 மணியளவில் கைவிட்டு வந்த பகுதிக்கு படையினர் மீளச் சென்றபோது உயிரிழந்த படையினரின் சடலங்களையும், குற்றுயிராகக் கிடந்த ஒருவரையும் கண்டனர். பிற்பகல் 4.00 மணியளவில் இத்துரதிஷ்டம் நேரிட்டது. கேணல் பொன்சேகாவிற்கு முன்பாக விழுந்த மோட்டார் ஷெல் வெடித்தது. அவர் தூக்கி எறியப்பட்டார். அதன்பின் களத்திலிருந்து நாம்அகற்றப்பட்டோம்' என்று தெரிவித்தார்.

நன்றி: சண்டே ஒப்சோவர்

## குமணவில் மருந்துகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்திய சாலைக்குரிய இந்த வருடத்திற்கான இறுதிப்பகுதிக்குரிய மருந்து வகைகள் குமண கப்பலில் எடுத்துவரப்படவுள்ளன.

மேற்படி மருந்து வகைகள் ஒரு வருடத்திற்கு நான்கு கட்டங்களாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு வைத்திய சாலை தலைமைப் பணிமனையினால் அனுப்பிவைக்கப்படுவது தெரிந்ததே.

மேலும் இம் மருந்து வகைகளை எடுத்து வருவதற்கு யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் ஓர் அதிகாரியை அனுப்பி வைத்துள்ளார் என தெரிவிக்கப்பட்டது. [பா]

## பதிவு செய்க

(தொல்புரம்)

தச்சுத் தொழிலாளருக்கு நிவாரண உலர்உணவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரியவருகிறது. தொல்புரம் மத்தி,மேற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த தச்சுத் தொழிலாளர்கள் அனைவரும் எதிர்வரும் 14/ஆம்திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் மேற்படி கிராமசேவையாளர் அலுவலகத்தில் உலர்உணவு அட்டையையும் குடும்பப்பதிவு அட்டையையும் ஒப்படைத்து பதிவு செய்யுமாறு தொல்புரம் மேற்கு கிராமசேவையாளர் திரு.இ.சிறிரஞ்சன் (யே/169) தெரிவித்துள்ளார்.

(41)

# சிறிலங்கா கடற்படையுடன் தமிழக மீனவர் மோதுவர்

## ஜெயலலிதா எச்சரிக்கை

[சென்னை]

''எடுத்ததற்கெல்லாம் துப்பாக்கி விசையை அழுத்தும் இலங்கை கடற்படையிடம் இருந்து தமிழக மீனவர்களை காக்க மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்காவிடின் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைஏற்படக்கூடியவாய்ப்புக்கள் உள்ளதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இந்தியப் பிரதமர் நரசிம்மரா

மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கொல்லப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி அவர் இக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக தமிழக மீனவர்களே பதிலடி கொடுக்க வாய்ப்புகள் இருக்கின்றது என்றும் ஜெயலலிதா தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகதெரிவித்தபி.பி.ஸி இவ்வாறு அவர் எதை குறிப்

தமது அச்சத்தைவிட்டு விடுதலைப் புலிகளின் கடற் புலிகளுக்கு துணையாக செயற்படக் கூடும்என சுட்டிக் காட்டியது.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்த பி.பி.ஸி. இந்திய மீனவர் கொல்லப்படுவது அதிகரித்து வருவதால் தமிழகத்தில் சட்ட ஒழுங்கு சீர்குலைவை ஏற்படுத்தும் மாநில

# துணைப்படை வீரருக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்டத்தில் கடந்த 10-ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் வீரச்சாவடைந்த துணைப் படை வீரர் 2-ம் லெப்டினன்ட் இராசதுரை சிவகுமாரின் வித்துடல் மக்கள் அஞ்சலிக்காக நெடுங்கேணி, முள்ளியவளைப் பகுதிகளில் வைக்கப் பட்டது.

நேற்று முன்தினம் இவரது வித்துடல் நெடுங்கேணியில் வைக்கப்பட்டபின் முள்ளியவளை மாவீரர் அஞ்சலி மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது பெருமளவு மக்கள் திரண்டு நின்று தமது வீர அஞ்சலியைச் செலுத்தினர்.

இதன்போது முல்லை மாவட்ட துணைப்படைப் பொறுப்பாளர்அமுதன், மாவட்ட கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர்சங்கர், கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் செல்வன் மற்றும் துணைப் படைவீரர் பரமேஸ்வரன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். இதனையடுத்து இராணுவ மரியாதையுடன் மாவீரர் துயிலும் இல்லத்தில் வித்துடல் விதைக்கப்பட்டது.

வங்கிகளுக்கு

வாந்தி பேதி

ஆனால், அமெரிக்கா மோதலைத் தவிர்த்து சமாதானம் நோக்கி விரைந்து செல்லப் பார்க்கின்றது. 'பயங்கரவாதி' என்றும், கொலைக் குற்றவாளி எனவும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அமெரிக்க இராணுவத்தால் தேடப்பட்டுவந்த நபருடன் சமரசம் செய்து கொள்ள முற்படுவதுடன், சோமாலிய அரசாங்கத்தில் அவருக்குப் பங்களிக்கவும் தயாராக உள்ளது.

அமெரிக்காவின் இத் திடீர் மாற்றத்திற்கு சோமாலியாவில் கொல்லப்பட்ட சில பத்து அமெரிக்க இராணுவத்தினரின் இழப்பு காரணமல்ல. வியட்நாமில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரின் இழப்பே காரணமாகும். அதாவது, மீண்டும் ஒரு வியட்நாமாக சோமாலியா அமெரிக்கப் படைகளுக்கு மாறிவிடக் கூடாது என்ற முன்னைய படிப்பினையே காரணமாகும்.

வியட்நாமில் அமெரிக்காவிற்குக் கிடைத்த கசப்பான படிப்பினையை அமெரிக்க நிர்வாகமும், மக்களும் மறந்துவிடவே விரும்புகின்றனர். ஈராக்கிற்கு வளைகுடாவில் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் போருக்குத் தயாரானபோது மீண்டும் ஒரு வியட்நாம் உருவாகி விடக்கூடாது என்று எச்சரிக்கப்பட்டது. அதில், புஷ் தப்பித்துக் கொண்டார். ஆனால், முன்னாள் யூக்கோசெலவோக்கியாவிற்கு துருப்புக்கள் அனுப்பப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபோது அமெரிக்கா நழுவிக் கொண்டது. இதற்கு சேபியர்களின் போர்க்குணம் குறித்த அச்சமே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. அதாவது, மலைகளும் பள்ளத்தாக்குகளும்நிறைந்தமுன்னாள் யூக்கோசெலவோக்கியாவின் பௌதீக அமைப்புடன் சேபியர்களின் போர்க்குணமும் சேர்ந்து அமெரிக்க சிப்பாய்களுக்கு ஒரு கசப்பான அனுபவம் நேர்வதை அமெரிக்க நிர்வாகம் தவிர்த்துக் கொண்டது எனலாம்.

ஆனால், இன்று வியட்நாமை ஒத்த ஒரு நிலையே சோமாலியாவில் உருவாகிக் கொண்டிருந்தது. சோமாலியாவில் இயங்கி வந்த ஜெனரல் அய்டீட்டின் கிளர்ச்சிக்காரப் படைகள் மட்டுமல்ல, சோமாலிய மக்களுமே அமெரிக்காவை எதிர்க்கத் தொடங்கி விட்டார்கள். பட்டினிச் சாவிலிருந்து தம்மைக் காப்பாற்ற வந்த ரட்சகர்களாக அமெரிக்கர்களை சோமாலியர் கருதவில்லை. ஆக்கிரமிப்பாளர்களாகவே கருதுகின்றனர். இதன் காரணமாக அமெரிக்க மற்றும் ஐ.நா. துருப்புகளுக்கு எதிராக சோமாலியர் போராடவும் ஆயத்தமாகிவிட்டனர்.

இந்நிலையை அமெரிக்கா நன்கு புரிந்து கொண்டது. தரைப் பகுதியில் மட்டுமல்ல, வான்பரப்பில் தமக்கு அச்சுறுத்தல்கள் உள்ளதென்பதோடு, மக்களின் எதிர்ப்பும், வியட்நாமை விடவும் ஒரு மோசமான நிலையையே உருவாக்கும் என்பதை புரிந்து கொண்டது. இதனால்தான் கடந்தகாலத்தில் கிடைக்கப் பெற்ற வரலாற்றுப் பாடத்தின் அடிப்படையில் நடக்க அமெரிக்கா முடிவு செய்தது. ஆனால், பொருத்தமான வேளையில் அமெரிக்கா இம் முடிவை எடுக்காது புறக்கணித்திருந்தால் பின்னர் பலமாக வருந்தவேண்டி வந்திருக்கும்.

ஆனால், வல்லரசான அமெரிக்கா கற்றுக் கொண்டுள்ள இப்பாடத்தை சிறிலங்கா அரசு இன்னமும் கற்றுக் கொள்ள மறுக்கின்றது. பிறர் அனுபவத்தில் இருந்துதான் கற்க முடியாது போனாலும், தனது நேரடி அனுபவத்தில் இருந்தும் இதை ஏற்க சிங்கள அரசு தயாராக இல்லை. இந்நிலையானது, இனவெறியில் சிங்களப் பேரினவாதம் தெளிவான சிந்தனையை இழந்து விட்டது என்பதையே காட்டுகின்றது.

# சிறிலங்கா கடற்படையுடன் தமிழக மீனவர் மோதுவர்

## ஜெயலலிதா எச்சரிக்கை

[சென்னை]

''எடுத்ததற்கெல்லாம் துப்பாக்கி விசையை அழுத்தும் இலங்கை கடற்படையிடம் இருந்து தமிழக மீனவர்களை காக்க மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்காவிடின் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைஏற்படக்கூடியவாய்ப்புக்கள் உள்ளதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இந்தியப் பிரதமர் நரசிம்மராவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்திய மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கொல்லப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி அவர் இக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக தமிழக மீனவர்களே பதிலடி கொடுக்க வாய்ப்புகள் இருக்கின்றது என்றும் ஜெயலலிதா தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகதெரிவித்தபி.பி.ஸி இவ்வாறு அவர் எதை குறிப்பிடுகிறார் என்பது தெளிவில்லை. ஆனால் மீனவர்கள் தமது அச்சத்தைவிட்டு விடுதலைப் புலிகளின் கடற் புலிகளுக்கு துணையாக செயற்படக் கூடும்என சுட்டிக் காட்டியது.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்த பி.பி.ஸி. இந்திய மீனவர் கொல்லப்படுவது அதிகரித்து வருவதால் தமிழகத்தில் சட்ட ஒழுங்கு சீர்குலைவை ஏற்படுத்தும் மாநில அரசு டில்லியுடன் மோதலாம் என்று குறிப்பிட்டது.

## போஸ்ரர் படம்

எமது தமிழீழ மண்மீட்புப் போராட்டத்தின் போது தற்கொடையான மாவீரர்ன் போஸ்ரர் படம் வெளிவந்துள்ளது.

திருமலை மாவட்டத் தளபதியும் மூத்த உறுப்பினருமான லெப். கேணல் சந்தோசம். (கணபதிப்பிள்ளை உமைநேசன், அரியாலை- யாழ்.)

இவ்வுருவப் படத்தையும், இதுவரை வெளிவந்த மாவீரர்களின் போஸ்ரர் படங்களையும் சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனை கொக்குவிலில் 8 30- 4.30வரை பெற்றுக் கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

## இரண்டாவது

பெயர்கள் இச் சண்டையில் பயன்படுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்,

மேஜர் ஜெனரல் ரோகான் தளுவத்தவிற்கு கிரக்சப்பல் என்றும், ஆனையிறவிலுள்ள பிரிகேட் கொமாண்டர் பிரிகேடியர் வசந்த பெரேராவிற்கு இயன் போத்தம் என்றும், கேணல் சரத் பொன்சேகாவிற்கு நமல் என்றும், கேணல் சாந்த கொட்டேகொடவிற்கு விக்கும் என்றும் கேணல் சரத் முனசிங்கவிற்கு ரிச்சர்ட் ஹாட்லீ என்றும், கேணல் சுசில் சந்திரபாலாவிற்கு அர்ஜுனா என்றும் இச்சண்டையின் போது குறிப்பீட்டுப் பெயர்கள் சூட்டப்பட்டு இருந்தன.

இச் சண்டையில் செக்கோசெலவாக்கிய தயாரிப்பான இரு யுத்த டாங்கிகள் முற்றாக நாசமாக்கப்பட்டதோடு மற்றுமொரு டாங்கி சேதமாக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## மீனவர் மீதான தாக்குதல் விவகாரம்

# சிறிலங்கா அதிகாரியை அழைத்து தெரிவிப்பு

[டில்லி]

இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்துமாறு இந்தியா சிறிலங்கா அரசை கேட்டுள்ளது. டில்லியில் உள்ள சிறிலங்கா தூதரகத்தின் மூத்த இராஜீகதுறை அதிகாரி நேற்று இந்திய வெளியுறவு அமைச்சகத்திற்கு அழைக்கப்பட்டு இந்தியாவின் இக்கோரிக்கை அவருக்கு தெரியப்படுத்தப்பட்டது

கடந்த வெள்ளியன்று சிறிலங்கா கடற்படை இந்திய மீனவர் மீது நடத்தியதாக்குதலில் 4 மீனவர் பலியாகி நால்வர் காயமடைந்தது குறித்த சம்பவத்திற்கு இந்தியாவின் ஆழ்ந்த கவலையும் சிறிலங்கா தூதரக அதிகாரியிடம் தெரிவிக்கப்பட்டது. இந்திய மீனவர்களுக்கு எதிராக தொடர்ந்து வன்முறைகள் நடக்காமல் பார்த்துக்கொள்ளும்படி சிறிலங்கா அரசை இந்தியா கோரியுள்ளது.

# லெப்.கேணல் விக்ரர் நினைவு எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட முன்னாள் தளபதி லெப். கேணல் விக்ரரின் நினைவுதினம்நேற்று மன்னார் மாவட்டத்தில் எழுச்சியுடன்அனுஷ்டிக்கப்பட்டது. பூநகரி, மடு, நானாட்டான், பள்ளமடு பகுதிகளில்நினைவுக் கூட்டங்கள் நடைபெற்றன. கிளிநொச்சி மாவட்டத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும், யாழ். மாவட்டத்திலும் விக்ரர் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

1986இல் அடம்பனில் இராணுவத்தினருடனான மோதலில் லெப். கேணல் விக்ரர் வீரச்சாவு அடைந்தார். இவருடன் 2-ம் லெப்.ரேமும் வீரச்சாவைத்தழுவிக்கொண்டார். நேற்று மன்னார் விக்ரர் நினைவு நாளை ஒட்டி எழுச்சிக் கோலம் பூண்டிருந்தது. பதாகைகளும் சிவப்பு மஞ்சள் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. வட்டரீதியாக இம் மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. முழங்காவிலில் முழங்காவில் வட்டப்பொறுப்பாளர் ஈகைச்சுடரை ஏற்றி வைத்தார். மாணவரும் மக்களும் மலரஞ்சலி செலுத்தினர். பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் விக்ரர் நினைவு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன வீரவணக்கக்கூட்டமும் நடைபெற்றது. மடுவில் அஞ்சலி நிகழ்வும் கருத்தரங்கும் நடைபெற்றன.

கிளிநொச்சி கோட்ட அரசியல் துறை நடுவகப்பணியகத்தில் விக்ரரின் உருவப்படத்திற்கு துஷ்யந்தன் ஈகைச்சுடர் ஏற்றினார். இதில் வன்னி மாவட்ட அரசியல் துறை நடுவப்பணியக பொறுப்பாளர் பாப்பா, மற்றும் போராளிகள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்

# துணைப்படை வீரருக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்டத்தில் கடந்த 10-ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் வீரச்சாவடைந்த துணைப் படைவீரர் 2-ம் லெப்டினன்ட் இராசதுரை சிவகுமாரின் வித்துடல் மக்கள் அஞ்சலிக்காக நெடுங்கேணி, மூள்ளியவளைப் பகுதிகளில் வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இவரது வித்துடல் நெடுங்கேணியில் வைக்கப்பட்டபின் மூள்ளியவளை மாவீரர் அஞ்சலி மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது பெருமளவு மக்கள் திரண்டு நின்று தமது வீர அஞ்சலியைச் செலுத்தினர்.

இதன்போது முல்லை மாவட்ட துணைப்படைப் பொறுப்பாளர்அமுதன், மாவட்ட கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர்சங்கர், கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் செல்வன் மற்றும் துணைப் படைவீரர் பரமேஸ்வரன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். இதனையடுத்து இராணுவ மரியாதையுடன் மாவீரர் துயிலும் இல்லத்தில் வித்துடல் விதைக்கப்பட்டது.

## வங்கிகளுக்கு

தாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

ஏற்கனவே கொழும்பில் வங்கிகளினால் பணம் செலுத்தப்பட்டு யாழ். அரச அதிபர் மூலமாக மண்ணெண்ணெயை வங்கிகள் பெற்றுவந்தன. ஆனால் தற்சமயம் யாழ். அரச அதிபருக்கு அரசு அனுப்பும் மண்ணெண்ணெயைக் குறைத்ததை அடுத்து வங்கிகளுக்குமண்ணெண்ணெய் வழங்க அவை போதுமானதாக இல்லைஎன கூறி வங்கிகளுக்கு மண்ணெண்ணெய் கொடுக்க அவர் மறுத்துள்ளார்என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

மேலும் வங்கிகள் தனியான முறையில் கொழும்பில்இருந்து மண்ணெண்ணெய் தருவிக்க முயற்சித்து வருவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

## புயல்

விருந்த நடவடிக்கை பாரிய உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியமை இராணுவத்திற்கு ஏற்பட்ட பெரும் தோல்வியே என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மேலும் திடீரென வீசும் சூறாவளி போல் விடுதலைப் புலிகள் போர் புரிந்ததாகக் குறிப்பிட்டார். இந்த சமரின் போது புலிகள் தமது கடும் எதிர்ப்பைக் காட்டினர். இதனால் 98 பேர் கண், கால், கை என்பன முற்றாக செயலிழந்த நிலையில் அனுராதபுரம்இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இந்த இராணுவத்தினரில் பலர் புலிகளின்கண்ணிவெடித் தாக்குதல்களிலும் மோட்டார் தாக்குதல்களிலும் மிதிவெடிகளிலுமே தமது அவயங்களை இழந்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

## யாழ்தேவி

விநியோகத்திற்கு அதிகளவில் கடற்படை படகுகள் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாந்தி பேதி 20 பேர் அனுமதி

(நமது நிருபர்)

வாந்திபேதி நோய்க்குள்ளாகியவர்கள் என சந்தேகிக்கப்படும் 20பேர் நேற்று யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வாந்திபேதி நோய்க்கு உள்ளாகி அனுமதிக்கப்பட்டோர் தொகையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டது. (சி)

## நரோமா

கப்பலில் 20 பயணிகள் சென்றனர். கடந்த 28ஆம் திகதி 'நரோமா' கப்பலில் காங்கேசன்துறைக்கு வந்து ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததால் பருத்தித்துறைக்கு வர முடியாமல் திரும்பிச் சென்றவர்களும் வந்தனர். (யோ)

## யுத்தத்தை

னும், அகதிகளுடனும் கலந்துரையாடியது.

வடக்கு கிழக்கு மாகாண மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை நேரில் கண்டறியும் நோக்குடனேயே இவர்கள் அங்கு சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.


## தற்கொலை

த்து வைக்கப்பட்டிருந்தது முகத்துவாரம் கடற்கரையில் ஒரு சிறுவனால் கடந்த ஏழாம் திகதி கண்டெடுக்கப்பட்டதையடுத்து கொழும்பில் பதற்ற நிலை உருவானதாகவும் பாதுகாப்பு உஷார் படுத்தப்பட்டதாகவும் கொழும்புச் செய்திகள் தெவிக்கின்றன.

## முன்னோடி

பீட்டு நிலையங்களிற்கு வருகைதந்து நியாயமான மதிப்பீட்டு வேலைகளை நடுநிலைமையில் நின்று நிறைவேற்றுமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார் (பா)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சபாபதிக் குருக்கள்
சுப்பிரமணியக் குருக்கள்

ஜனனம்: 10-08-1911
மரணம்: 24-09-1992

திதி: புரட்டாதி அபரபக்க திரயோதசி 13-10-93

இம்மை வரை நீங்காது உங்கள்
இன் சொல்லும் கனிந்த பார்வையும்
எம்மை ஆளாக்கி வளர்த்த அன்புருவே
உம் நினைவில் நாளும் வாழுகின்றோம்.

குடியிருப்பு,
சுழிபுரம்.

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(சி-7578)

## 31-ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிருத்தியமும்



## கணக்காய்வாளர்கள் தேவை

(வன்னிப் பிராந்திய பொது நிர்வாக அலுவலகம்)

வன்னிப் பிராந்தியத்தில் கணக்காய்வு செய்யக் கணக்காய்வாளர்கள் தேவைப்படுகின்றனர்

கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களுக்கும், கூட்டுறவுத் துறையில் பணியாற்றிய அனுபவம் உடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை இல்லை. தங்குமிட வசதியும், போக்கு வரத்து வசதியும் அளிக்கப்படும்.

நேரில் பேசி, சம்பளம் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

**யாழ். வட்டச் செயலகம்**

(ராஜா டீசல் இஞ்ஜினியேர்ஸ்க்கு அருகாமையில்)

பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7579)

## யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

**KILLER INSTINCT**

(கொலை வெறி)

(முழுநீளத்தாக்குதல் சித்திரம்)

தினசரி மாலை 4.00 மணி, 6-00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30 மணி,
மாலை 4-00 மணி, 6-00மணி

(சி-7352)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி நன்னித்தம்பி லீலாவதி

தோற்றம்: 19-12-1919
மறைவு: 18-9-1993

# பிரதேச கல்வி அலுவலகங்கள் வெள்ளி முதல் இயங்கும்

பிரதேச கல்விச் செயலகங்கள் 15ஆம் திகதி வெள்ளி முதல் இயங்கச்செய்வதற்குரிய தீர்மானம் நேற்றைய தினம் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டதாக யாழ். கல்வித் திணைக்கள செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் அவ்வப் பிரதேச கல்விச் செயலகங்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளவர்களில் நிதி, சம்பள வேலைகளைத் தற்போது செய்து கொண்டிருக்கும் ஊழியர்கள் 31-1-94 வரை தற்போதுள்ள இடங்களிலேயே கடமையாற்றுவார்கள் எனவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இடமாற்றக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச கல்விச் செயலகங்களிலும் ஒவ்வொரு கோட்டத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் வேலைக்குப் பொறுப்பாக ஓர் உதவிக் கல்விப் பணிப்பாளர், நிதி உதவியாளர் காரியாலய உதவியாளர் ஒவ்வொருவரும் எழுதுவினைஞர்கள் நால்வரும் கணக்குப்பதிவாளர் ஒருவரும், சிற்றூழியர் ஒருவருமாக பத்து உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். (17)

## கலந்துரையாடல்

யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாச கலந்துரையாடல் நாவலர் கலாசார மண்டபத்தில் இன்றுபிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் சமாசத்தில் அங்கம் வகிக்கும் சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## 'வித்து' வெளியீடு

வேலணை கொததணி மாணவர் அமைப்பின் வெளியீடான 'வித்து' கையெட்டு பிரதியின் வெளியீட்டுவிழா இன்று வைத்தீஸ்வரா கல்லூரியில் பிற்பகல் மூன்று மணிக்கு இடம்பெறும்.

## கூட்டம்

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் இன்று காலை 11.00 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள யூனியன்கல்லூரி மண்டபத்தில்நடைபெறுமென்றும் இக் கூட்டத்தில் அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 12-10-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11163

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-3937, 42 9220, 27.5217 24 5774, 28-4255
26-9283, 27-3927, 40.2394, 26 536 , 27-9033
40-9188, 43 3576, 26 1495, 27 2056, 26-3518
26-6029, 24-6855, 24 7628, 27 8164.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-6452, 24 9390, 42-2355, 24-4701, 41-9487
24-8391, 24 5241, 41 9579, 26 9658, 41-8096
27-1531, 26-1658, 24-3258, 41 4194, 26 2365
28-4183, 41-6933, 42-2432.

## 6-வது வெற்றுப் போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில் பரிசு பெற்றோர் விபரங்கள் வருமாறு

[1] 4014 வி. பாஸ்கரன் 477, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். [2] 2887 என். நாகேந்திரன்வல்லிபுர குறிச்சி. [3] 2897 நிசாந்தினி குலனை வீதி, நவிண்டில். [4] 3006 க. சிவஞானம் அரசடி வீதி, இருபாலை, கோப்பாய். (5) 2876 எஸ். வி. பாஸ்கரன் வல்லிபுர குறிச்சி. (6) 2891 கு. குகமதி கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. (7) 2892 ப. இந்திரன் குலனை வீதி, நவிண்டில், கரவெட்டி. (8) 2869 கோ. கேதீஸ்வரன் பல்லப்பர் தெற்கு, பருத்தித்துறை. (9) 3060 யா/மா சி க/கூ/ச/ சமாசம் 182 1/4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (10) 3011 ஆர். ரஞ்சனா 67, செம்பத் தெரு. நல்லூர். (11) 3034 சி. ஆனந்தராசா 11, அரசடி ஒழுங்கை. வண்ணார்பண்ணை. (12) 2652 பா. திரேஸ்குமார் மே/பா பாலசிங்கம் காளிகோவிலடி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. (13) 2956 தங்கர் கண்டி வீதி, சாவகச்சேரி. [14] 2669 கு. நாதஸ்வரரூபினி சத்தியவாசா, இமையாணன், உடுப்பிட்டி. [15] 2961 தி. திருவரசன் சவனாய், பருத்தித்துறை. [16] 4082 சொதுவாரகன் 37, சிவகுருநாதர்வீதி, யாழ்ப்பாணம். (17) 3088 திருமதி ஐ. குணாளசிங்கம் 547, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (18) 3090 திருமதி ஐ. குணாளசிங்கம் கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (19) 4004 து. சைலேந்திரன் 37, சிவகுருநாதர் வீதி, யாழ்ப்பாணம். [20] 2991 முருகன் ஸ்ரோர்ஸ் கொடிகாமம். (21) 3018 வி. லிங்கேஸ்வரன். வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழை. [22] 4017 எஸ். ஜசீவன் 206, பிறவுண் றோட். [23] 3023 இ. சாருஜன் 43, B பூனாறிமா லேன், யாழ்ப்பாணம். (24) 3064 என். நந்தகுமார் மணியகாரன் ஒழுங்கை கொக்குவில் கிழக்கு கொக்குவில். (25) 2702 ஏ. இரத்தினவேல் நறுவிலடி வி. வி. ரி (26) 2679 இராஜேஸ்வரி ரஜினி பீடாஸ்ரோர், உடுப்பிட்டி. (27) 4016 த. தயா

குடியிருப்பு,
சுழிபுரம்.

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(சி-7578)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிருத்தியமும்



திருமதி

## நாகேஸ்வரராசா கமலாசினி

மடி தமுவிட
25-10-1949

பிடி நமுவிட
14-09-1993

கண்ணிலே குளிர் நிலவும்-
காட்டி நின்ற அருள் வடிவம்
பெண்ணிலே போற்றும குணம்
பெற்றதொரு கமல மனம்
மண்ணிலே எமதும் நிழல்
மாதரசி! நீ செய்த தவம்
எண்ணமும் அனைவர் நலம்
என்றவளும் சென்றதெங்கே!

அன்னையாய் நீ தந்த பலம்
அத்தனையும் கரையுதம்மா
தன்னையே ஈந்தும் உயிர்
தந்தவையும் துவளுதம்மா
முன்னனையே சூழும் இருள்
மோதி வலு காட்டுதம்மா
உன்னையே கேட்கும் வரம் - ஒளி
வெள்ளம் இட வேண்டும் அம்மா!

எமது இல்லத்தில் நாளை (14-10-93) நடைபெறும் அன்னாரின் ஆன்ம சாந்திப் பிரார்த்தனை வைபவங்களில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமகன்
பெற்றோர், சகோதரங்கள்,
உறவினர், நண்பர்கள்.

ஆலடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(6263)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## திருமதி நன்னித்தம்பி லீலாவதி

தோற்றம்:
19-12-1919

மறைவு:
13-9-1993

**தீதி: 13-10-1993**

அன்பிற்கோர் திருவுருவாய்
பண்பிற்கோர் உறைப்பிடமாய்
வாழ்ந்த எம் தாயே
என்றுதான் உமைக் காண்போம்
ஆண்டு பல சென்றாலும் உமை
நாம் மறவோம்.

எமது தாயாரின் மரணச் சடங்கில் நேரில் கலந்து கொண்டோருக்கும் மலர் வளையம் சாத்தியோருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

25, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-7585]

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 6-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



## வீரவேங்கை அக்பர் (அருணாசலம் பாலகுமார்)

மலர்வு:
6-6-68

வீரச்சாவு:
13-10-87

அருணாசலம் நாகேஸ்வரி ஆசிரியர்களின் மூத்த திருக்குமாரா! இந்திய இராணுவப் போராட்டத்தில் இன் உயிர்நீத்தனையோ. பொன்னிருக்கப் பொருளிருக்க புகழ் தரும் கல்விச் செல்வமிருக்க ஒன்றையும் வேண்டாமென்று தாயக மண்ணொன்றே வேண்டுமென்று போராடப் புறப்பட்ட வேங்கையே, பல்கலைக்கழகத்தில் உன் பெருமை காட்டுவதற்கிடையில் மண்மீட்கும் புகழ் எய்தினாய், தேவனே உன் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனை இறைஞ்சுகிறோம்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(6274)

பெற்றோர், சகோதரர்,
நண்பர்கள்.

வேலணை கொத்தணி மாணவர் அமைப்பின் வெளியீடான 'வித்து' கையேட்டு பிரதியின் வெளியீட்டுவிழா இன்று வைத்தீஸ்வரா கல்லூரியில் பிற்பகல் மூன்று மணிக்கு இடம்பெறும்.

### கூட்டம்

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் இன்று காலை 11.00 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள யூனியன்கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென்றும் இக் கூட்டத்தில் அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

### பெற்றோர்தின விழாவும் பரிசளிப்பும்

பருத்தித்துறை மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலய பெற்றோர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. ந. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறுகின்றது. பிரதம விருந்தினராக வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை கலந்து கொள்கிறார். (25)

### கல்விக் கண்காட்சி

யாழ். சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி நாளையும் நாளை மறுதினமும் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கல்விக் கண்காட்சியில், பிரதம விருந்தினராக தொழில் நுட்பத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் ச. சுப்பிரமணியமும் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்திரு. ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகளாரும் பங்குபற்றவுள்ளனர்.

### கலந்துரையாடல்

வடபிராந்திய பேக்கரி ஊழியர் பேரவை வரும் 16ஆம் திகதிசனிக்கிழமைகாலை 9.00 மணிக்கு இணுவிலிலுள்ள தலைமைக்காரியாலயத்தில் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடத்த உள்ளது யாழ். மாவட்ட தொழிற் சங்கபிரதிநிதி கலந்து கொண்டுஉரை நிகழ்த்துவார். அனைத்து தொழிலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு மேற்படி பேரவையின் அமைப்பாளர் கேட்டுள்ளார்.

### திசை

அக்கரையில் மனித நடமாட்டம் எதுவும் காணப்படவில்லை என்றும் அனேகமாக ஆனையிறவு முகாம் பக்கமாக இருக்கலாம் என்றும் கடற்புலிகளால் மீட்கப்பட்ட மேற்படி பயணிகளில் ஒருவர் தெரிவித்தார்.

தெற்கு, பருத்தித்துறை. (9) 3060 யா/மா சி.கூ/கூ/ச/ சமாசம் 182 1/4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (10) 3011 ஆர். ரங்கனா 67, செம்பத் தெரு. நல்லூர். (11) 3034 சி. ஆனந்தராசா 11, அரசடி ஒழுங்கை. வண்ணார்பண்ணை. (12) 2652 பா. திரேஸ்குமார் மே/பா பாலசிங்கம் காளிகோவிலடி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. (13) 2956 தங்கர் கண்டி வீதி, சாவகச்சேரி. [14] 2669 கு. நாதஸ்வரரூபினி சத்தியவாசா, இமையாணன், உடுப்பிட்டி. [15] 2961 தி. திருவரசன் சவனாய், பருத்தித்துறை. [16] 4082 சொ துவாரகன் 37, சிவகுருநாதர்வீதி, யாழ்ப்பாணம். (17) 3088 திருமதி ஐ. குணாளசிங்கம் 547, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (18) 3090 திருமதி ஐ. குணாளசிங்கம் கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (19) 4004 து. சைலேந்திரன் 37, சிவகுருநாதர் வீதி, யாழ்ப்பாணம். [20] 2991 முருகன் ஸ்ரோர்ஸ் கொடிகாமம். (21) 3018 வி. லிங்கேஸ்வரன். வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழை. [22] 4017 எஸ். ஜசீவன் 206, பிறவுண் றோட். [23] 3023 இ. சாருஜன் 43, B பூனாறிமா லேன், யாழ்ப்பாணம். (24) 3064 என். நந்தகுமார் மணியகாரன் ஒழுங்கை கொக்குவில் கிழக்கு கொக்குவில். (25) 2702 ஏ. இரத்தினவேல் நறுவிலடி வி. வி. ரி (26) 2679 இராஜேஸ்வரி ரஜினி பீடாஸ்ரோர், உடுப்பிட்டி. (27) 4016 த. தயாபரன் தட்டாதெரு, யாழ்ப்பாணம். (28) 2871 கோ. கேதீஸ்வரன் பல்லப்பர் தெற்கு பருத்தித்துறை. (29) 2985 அ. அற்புதகுமார் டச்வீதி, சாவகச்சேரி. (30) 2988 எஸ். மணியம் சாவகச்சேரி. (31) 3047 ச. இந்திரா பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவில். (32) 3072 எஸ். யேசுதாசன் இல. 9 பெண்டி சோஸ்லேன் கச்சேரி. [33] 3039 நா. சண்முகலிங்கம் வடக்கம்பரை சித்தன்கேணி, தொல்புரம். [34] 514 மீ. மாதுமை ஏழாலை மேற்கு சுன்னாகம் [35] 4015 நா. பாமினி 218-1 பலாலிவீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். [36] 1196 ம. பிறேத் கணேசவாசம் இருபாலைச்சந்தி, கோப்பாய். (37) 1194 து. சுந்தராம்பாள்கணேசவாசம் இருபாலைச் சந்தி, கோப்பாய் (38) 1192 கு ராஜசிங்கம் பிரபாவீதி கோப்பாய் தெற்கு, கோப்பாய் (39) 2862 என். நாகேந்திரன் வல்லிபுரகுறிச்சி (40) 2663 ஏ வைத்தியநாதன் பிரதானவீதி, தொண்டமானாறு.

**7ஆவது வெற்றுப் போத்தல்பரிசு குலுக்கல் போட்டியில் பங்கு பற்றவும்**

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE JAFFNA.

(சி-7591)

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு சின்னப்பிள்ளை

நல்லூர் வைமன் வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு [ஓய்வுபெற்ற C T B. சாரதி] வின் மனைவி சின்னப்பிள்ளை காலமாகிவிட்டார்.

இவர் கந்தையாவின் அன்பு சகோதரியாவார். கலாவதியின் அன்பு தாயாரும், கலாவதி [இத்தாலி] மருமகன் இராசேந்திரன் [இத்தாலி], பெறாமகன் லோகதாஸ் [பிரான்ஸ்], லோகேந்திரன் [பிரான்ஸ்], லோகேஸ்வரன் [பிரான்ஸ்], லோகநாதன் (பிரான்ஸ்), லோகச்சந்திரன் [இந்தியா[ லோகநிமால் [இந்தியா], பெறாமகள் லோகேந்திராணி [பிரான்ஸ்]. மருமகன் புதுமைலோலன் (பிரான்ஸ்) லோகறஞ்சினி (மாணவி), லோஜினி [யாழ். கன்னியர் மடம் மகாவித்தியாலயம் மாணவி], பழனியின் அன்பு மச்சாளும், புவனேஸ்வரியின் அக்காவும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லததில் 13-10 93 இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!

29, வைமன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பொ. பழனி (மச்சான்)
இ. கந்தையா (சகோதரன்)

(6275)